வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர்களுக்கு வரி விலக்கு

வணிகர்களின் எளிமையான வரித் தாக்கல்: ஓரடுக்கு ஜி.எஸ்.டி. முறையின் சிறப்பு

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கோரிக்கை

சென்னை, அக்.23

ஓரடுக்கு ஜி.எஸ்.டி.யே வணிகர்களின் எளிமையான வரித்தாக்கலுக்கும் பயனுடையதாக இருக்கும், பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி.வரம்புக்குள்கொண்டுவர வேண்டும் என்று வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் நிர்மலா சீதாராமனிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. வரி விகிதம் 2 அடுக்காக மாற்றியமைக்கப்பட்டதற்காக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கோவையில் அடுத்த மாதம் (நவம்பர்) 11ந் தேதி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட உள்ளது. இந்த விழாவுக்கான அழைப்பிதழை டெல்லியில் நிர்மலா சீதாராமனை நேரில் சந்தித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநில தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வழங்கினார்.

இதையடுத்து வணிகர்களின் 20 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் நிர்மலா சீதாராமனிடம், ஏ.எம்.விக்கிரமராஜா கொடுத்தார். அப்போது, மாநில பொதுச்செயலாளர் கோவிந்தராஜுலு, மாநில தலைமைச்செயலாளர் பேராசிரியர் ஆர்.ராஜ்குமார், மாநில கூடுதல் செயலாளர் எஸ்.ராஜசேகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வழங்கிய மனுவில் உள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:

★ வணிகர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு ஜி.எஸ்.டி. தொடர்பான பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர, வணிக பிரதிநிதிகளை கொண்ட குழு ஒன்று அமைத்து, கலந்தாலோசித்த பிறகே உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

★ ஒரே நாடு ஒரே வரி என்ற கோரிக்கைக்கு மாற்றாக தற்போது அரசு அறிவித்திருக்கின்ற ஈரடுக்கு ஜி.எஸ்.டி.யை வணிகர்கள் வரவேற்றாலும், ஓரடுக்கு ஜி.எஸ்.டி.யே அரசின் வருவாய்க்கும், வணிகர்களின் எளிமையான வரித்தாக்கலுக்கும் பயனுடையதாக இருக்கும்.

★ பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டுவர வேண்டும். டீக்கடைகள், உணவகங்களுக்கு வினியோகிக்கப்படும் வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர்களுக்கு ஜி.எஸ்.டி. வரிவிலக்கு அல்லது மானியம் வழங்க வேண்டும்.

இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

அண்ணா பல்கலைக்கழக பதிவாளராக குமரேசன் நியமனம்

சென்னை, அக்.23

தமிழ்நாட்டில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரிகளில் போலி பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்ட விவகாரத்தில், பல கல்லூரிகள் ஒரே பேராசிரியரை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பணிபுரிவதாக கணக்கு காட்டிய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்த சம்பவம் வெட்ட வெளிச்சத்துக்கு வந்த நிலையில், அதில் தொடர்புடைய 250க்கும் மேற்பட்ட கல்லூரிகளுக்கு அண்ணா பல்கலைக்கழகம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது. கல்லூரிகளும் அதற்கு விளக்கம் அளித்தது.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய அண்ணா பல்கலைக்கழக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக சொல்லப்பட்டு வந்த சூழலில், அப்போது துணைவேந்தராக இருந்த வேல்ராஜ் மீது சஸ்பெண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், அதனோடு தொடர்புடைய அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் உள்ளிட்ட 11 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. இந்த நிலையில் சமீபத்தில் கூடிய அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் கூட்டத்தில் இதுகுறித்து உறுப்பினர் ஒருவர் எழுப்பிய விவாதத்தின் அடிப்படையில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, போலி பேராசிரியர்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பதிவாளர் பிரகாஷ் உள்ளிட்ட 11 அதிகாரிகள் அவர்கள் வகித்து வந்த கூடுதல் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அண்ணா பல்கலைக்கழகம் முழுவதுமாக உறுதிப்படுத்தாத சூழலில், தற்போது புதிய பதிவாளர் நியமனம் செய்யப்பட்டு அவர் பதவி ஏற்று இருப்பதாக உயர்கல்வித்துறை நேற்று அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது.

அதன்படி, புதிய பதிவாளராக (பொறுப்பு) அண்ணா பல்கலைக்கழக கல்வி பாடநெறி மைய இயக்குனர் வெ.குமரேசன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சார்ஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடைமையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்: கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in

வ எ ண்	(ஏ) கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	(பி) மீட்க வேண்டிய பாக்கி (ஓ/எஸ்) (ஈடுபெற்ற ஆஸ்திகள்)	(சி) அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	(டி) சுவாதீன வகை	(இ & எப்) குறைந்தபட்ச விலை (ரூபாயில்) முன் வைப்புத் தொகை (ரூ.)	(ஜி) ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்): *HL25MLI000109744* 1. திரு/திருமதி. ஜெகதேஷ் ஆர். 2. திரு/திருமதி. தனலட்சுமி ஆர். 3. திரு/திருமதி. பரத் ஆர். முகவரி : எண். 33, சின்னதுரை சந்து, சு. பாப்பம்பாடி, திருவண்ணாமலை கோயில், திருவண்ணாமலை, தமிழ்நாடு 606808. மேலும்: கதவு எண். 33, பாப்பம்பாடிசாலை, சுக்கம்பாளையம் கிராமம், காட்டம்பூண்டி கிராமம் பஞ்சாயத்து, திருவண்ணாமலை தாலுக்கா, திருவண்ணாமலைமாவட்டம், சுக்கம்பாளையம் காட்டம்பூண்டி, திருவண்ணாமலை, திருவண்ணாமலை, திருவண்ணாமலை 606808.	11.06.2025 அன்று ரூ.20,24,808/– (ரூபாய் இருபது லட்சத்து இருபத்து நான்காயிரத்து எண்ணூற்று எட்டு மட்டும்)	திருவண்ணாமலை மாவட்டம் & பதிவு மாவட்டம், திருவண்ணாமலை சார் பதிவு அலுவலகம் II காட்டம்பூண்டி கிராமம், தரிசு நிலத்தின் சர்வே எண். 130/3K, விஸ்தீரணம் 0.03 3/4 சென்ட், நிலம் 0.03 3/4 சென்ட் கட்டிடம்: கீழ் தளம் 1078 சதுர அடி, 0.03 3/4 சென்ட் நிலத்திற்கும் கட்டிடத்திற்கும் எல்லைகள்: கிழக்கே: கனகசபாபதி இடம், மேற்கே: பாரத் இடம், வடக்கு: சாலை, தெற்கே: ராஜேந்திரன் இடம். இதன் மத்தியில் 0.03 3/4 சென்ட் காலி இடம்.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	ரூ.41,29,500/– (ரூபாய் நாற்பத்தொரு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) ரூ.4,12,950/– (ரூபாய் நான்கு லட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்)	**26.11.2025** அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)

✱ ஆய்வு தேதி & நேரம் : 24.11.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. ✱ குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/–

✱ஏலம் / இஎம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 25.11.2025 அன்று மாலை 5.00 மணிவரை

✱ பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன. சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், திரு. சாமுவேல் சாமிதுரை அவர்களின் மொபைல் எண் 9500350890, மின்னஞ்சல் முகவரி :samuels@chola.murugappa.com/சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அதிகாரி, திருமதி. கோமல் சர்மா அவர்களை, 8870464652 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துகள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

தேதி : 22.10.2025
இடம்: திருவண்ணாமலை, தமிழ்நாடு

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

தமிழகத்தில் 90 அணைகளில் 196 டி.எம்.சி. தண்ணீர் சேமிப்பு: நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல்

வடகிழக்கு பருவமழை எதிரொலி

சென்னை, அக்.23

வடகிழக்கு பருவமழை எதிரொலியாக தமிழகத்தில் உள்ள 90 அணைகளில் 196 டி.எம்.சி. அதாவது 87.77 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொடங்கிய வடகிழக்கு பருவமழையால் பரவலாக மாநிலம் முழுவதும் மழை பெய்து வருகிறது. நீர்தேக்கங்களுக்கு தண்ணீர் வரத்தும் இருந்து வருகிறது. நீர்வள துறை பராமரிப்பில், 90 அணைகள் மற்றும் நீர்தேக்கங்கள் உள்ளன. இவற்றின் ஒட்டுமொத்த கொள்ளளவு 224 டி.எம்.சி. ஆகும். இதில், மேட்டூர், பவானிசாகர், பரம்பிக்குளம் உள்ளிட்ட 15 முக்கிய அணைகளின் கொள்ளளவு மட்டும் 198 டி.எம்.சி. இந்த அணைகள் பல்வேறு மாவட்டங்களின் பாசனம், குடிநீர் தேவையை மட்டுமின்றி, தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையையும் பூர்த்தி செய்கின்றன. தற்போது, 90 அணைகளிலும் சேர்த்து, 196.897 டி.எம்.சி. அதாவது 87.77 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் குடிநீர் தட்டுப்பாடு இன்றி வினியோகிக்கப்பட்டு வருகிறது. அதிகபட்சமாக சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் 93.47 டி.எம்.சி, ஈரோடு பவானிசாகரில் 30.31, கோவை பரம்பிக்குளத்தில் 13.34 பெரியார் 6.63, சாத்தனூர் 6, வைகை 5.60, சோலையாறு 4.80, ஆழியாறு 3.77, பேச்சிப்பாறை 3.44, மணிமுத்தாறு 3.43 டி.எம்.சி. அதிகபட்சம் இருப்பு உள்ளது. தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவமழை மூலம் சேமிக்கப்பட்டுள்ள தண்ணீர் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக திறக்கப்படுவதுடன், செம்பரம்பாக்கம், பூண்டி உள்ளிட்ட ஏரிகளில் இருந்து உபரி நீரும் திறந்துவிடப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 14 ஆயிரத்து 141 பாசன ஏரிகள் உள்ளன. அவற்றில் 1,522 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பியுள்ளது. 1,842 ஏரிகள் 76 முதல் 99 சதவீதமும், 2 ஆயிரத்து 253 ஏரிகள் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் நிரம்பியுள்ளது. அதேபோல், 3 ஆயிரத்து 370 ஏரிகள் 26 முதல் 50 சதவீதமும், 4 ஆயிரத்து 534 ஏரிகள் 1 முதல் 25 சதவீதமும் நிரம்பியுள்ளது. 620 ஏரிகள் நீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது.

அதிகபட்சமாக 2 ஆயிரத்து 40 ஏரிகள் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் 390 ஏரிகள் நூறு சதவீதம் நிரம்பி முதலிடத்தில் உள்ளது. அதேபோல் ராணிப்பேட்டை மாவட்டத்தில் 369 ஏரிகளில் 192 முழு கொள்ளளவை எட்டியது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 697ல் 164 ஏரிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 641 ஏரிகளில் 157 முழுமையாக நிரம்பியது. இதில் அதிகபட்சமாக நெல்லை, திண்டுக்கல் மாவட்டங்களில் தலா 95 ஏரிகளில் நீரின்றி வறண்டு கிடக்கிறது. தேனி 64, மதுரை 59, நாமக்கல் 49, சேலம் 38, சிவகங்கை 34, தர்மபுரி 29, திருச்சி 28 நீர்நிலைகளில் போதிய அளவு நீரின்றி காணப்படுகிறது.சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல், கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம் மற்றும் வீராணம் ஆகிய 6 நீர்நிலைகளிலும் சேர்த்து 10 டி.எம்.சி. சேமிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக மாதம் 1 டி.எம்.சி. வீதம் வினியோகம் செய்யப்படுகிறது. அதேபோல், தற்போது ஏரிகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதாகவும் நீர்வளத்துறை அதிகாரிகள் கூறினர்.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சார்ஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடைமையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்: கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in

வ எ ண்	(ஏ) கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	(பி) மீட்க வேண்டிய பாக்கி (ஓ/எஸ்) (ஈடுபெற்ற ஆஸ்திகள்)	(சி) அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	(டி) சுவாதீன வகை	(இ & எப்) குறைந்தபட்ச விலை (ரூபாயில்) முன் வைப்புத் தொகை (ரூ.)	(ஜி) ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்): X0HLMLI00002643409 1. திரு/திருமதி. தங்கராசு சி. 2. திரு/திருமதி. ராஜி டி. 3. திரு/திருமதி. விஜய் டி. 4. திரு/திருமதி. கார்த்திகேயன் எஸ் முகவரி வ.எண்.1 முதல் 4 வரை: எல்&டி கன்ஸ்ட்ரக்ஷன், போர்டு ஜிபிஎஸ் வசதி திட்டம் செஸ் எல்காட், சோழிங்கநல்லூர், சைதாப்பேட்டை, தமிழ்நாடு 600119. மேலும் வ.எண்.1 முதல் 3 வரை: 268/7 காமராஜ் சாலை, அரகண்டநல்லூர், விழுப்புரம் மாவட்டம், நா திருக்கோயிலூர் – 605752.	11.06.2025 அன்று ரூ.22,84,102/– (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று இரண்டு மட்டும்)	விழுப்புரம் மாவட்டம் & பதிவு மாவட்டம், அரகண்டநல்லூர் சார் பதிவு அலுவலகம், டி. தேவனூர் கிராமம், ச.எண். 167/2B1 (புதிய ச.எண். 167/2B1–127 சதுர மீட்டர். கோட்டமேடு) எல்லைகள்: கிழக்கு : உமா மகேஸ்வரனின் காலி இடம், மேற்கு : எலவாசனின் வீடு, வடக்கு : சாலை மற்றும் தெற்கு : தென்பெண்ணை ஆறு. கிழக்கிலிருந்து மேற்காக இடையில் 22 ½ அடி, வடக்கிலிருந்து தெற்காக 60 அடி. மொத்தம் 1350 சதுர அடி காலி இடம் மற்றும் கிழக்கிலிருந்து மேற்காக 22 ½ அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 15 அடி. மொத்தம் 337 ½ சதுர அடி மற்றும் கிழக்கிலிருந்து மேற்காக 20 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 45 அடி. மேற்கூறிய மனையின் பின்புறத்தில் மொத்தம் 900 சதுர அடி. அனைத்து உபகரணங்களுடன் மொத்தம் 1237 ½ சதுர அடி.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	ரூ. 36,66,700/– (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து எழுநூறு மட்டும்) ரூ.3,66,670/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து அறுநூற்று எழுபது மட்டும்)	**26.11.2025** அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)

✱ ஆய்வு தேதி & நேரம் : 24.11.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. ✱ குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/–

✱ஏலம் / இஎம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 25.11.2025 அன்று மாலை 5.00 மணிவரை

✱ பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன. சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், திரு. சாமுவேல் சாமிதுரை அவர்களின் மொபைல் எண் 9500350890, மின்னஞ்சல் முகவரி :samuels@chola.murugappa.com/சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அதிகாரி, திருமதி. கோமல் சர்மா அவர்களை, 8870464652 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துகள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

தேதி : 22.10.2025
இடம்: விழுப்புரம், தமிழ்நாடு

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

Notice for Manufacture, Storage and Sale of 100% Water soluble Mixture of Fertilizers

Please refer to the Order - Requirement No. 2900 (E) Dated 24th October 2015 in FCO 1985.

We are pleased to inform the general public that with reference to the Order No. 2900(E) dated 24th October 2015 issued by Ministry of Agriculture & Farmers Welfare and amendment thereafter, Greenstar Fertilizers Limited will commence Manufacturing, Storage and Sale of the following 3 grades of 100 % Water Soluble Mixture of Fertilizers in the State of Tamil Nadu.

The Product details are given below:

Nutrients	Grade
NPK	28:28:00
NPK	00:42:42
NPK	00:44:44

GREENSTAR

Greenstar Fertilizers Limited
'SPIC HOUSE', No.88, Mount Road,
Guindy, Chennai - 600 032

மாண்புமிகு பிரதம மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பூவிருந்தவல்லி
வழக்கிடை மனு எண். 5 /2024
இன்
அசல் வழக்கு எண். 53 / 2017

மகாதேவன் (காலமாகிவிட்டார்)
மற்றும் பலர் ...மனுதாரர்கள்/வாதிகள்
எதிர்
சங்கர் (காலமாகிவிட்டார்) மற்றும் பலர்
...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

பெறுநர்:
2. மணி, த/பெ. லேட்.முத்து,
குடியிருக்கும் எண்.3,
மாரியம்மன் கோயில் தெரு,
பூவிருந்தவல்லி, சென்னை600 056.
...2வது எதிர்மனுதாரர்/ 2வது பிரதிவாதி
மேற்படி 2வது எதிர்மனுதாரர்/ 2வது பிரதிவாதிக்கு:

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் உங்களுடைய ஆட்சேபணையை 13.11.2025 அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ, வழக்குரைஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது, தவறினால் மேற்படி மனுவில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும் .

M.K.முரளி
மனுதாரர்கள்/
வாதிகளின் வழக்குரைஞர்
பூவிருந்தவல்லி

மாண்புமிகு பிரதம மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பூவிருந்தவல்லி
வழக்கிடை மனு எண். 2 /2024
மற்றும்
வழக்கிடை மனு எண். 3 /2024
மற்றும்
வழக்கிடை மனு எண். 4 /2024
இன்
அசல் வழக்கு எண். 53 / 2017

மகாதேவன் (காலமாகிவிட்டார்)
மற்றும் பலர் ...மனுதாரர்கள்/வாதிகள்
எதிர்
சங்கர் (காலமாகிவிட்டார்) மற்றும் பலர்
...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

பெறுநர்:
8. அமுதா, க/பெ. சங்கர்,
9. அரவிந்த் ராஜ், த/பெ. சங்கர்,
10. அஸ்வினி, த/பெ. சங்கர்,
8 முதல் 10 வரை உள்ள எதிர்மனுதாரர்கள்/ 8 முதல் 10 வரை உள்ள எதிர்நோக்கு பிரதிவாதிகள்,
குடியிருக்கும் எண்.3, மாரியம்மன் கோயில் தெரு, பூவிருந்தவல்லி,
சென்னை600 056.
...8 முதல் 10 வரை உள்ள எதிர்மனுதாரர்கள்/ 8 முதல் 10 வரை உள்ள எதிர்நோக்கு பிரதிவாதிகள்
மேற்படி 8 முதல் 10 வரை உள்ள எதிர்மனுதாரர்கள்/ 8 முதல் 10 வரை உள்ள எதிர்நோக்கு பிரதிவாதிகளுக்கு:

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுக்களில் உங்களுடைய ஆட்சேபணையை 13.11.2025 அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ, வழக்குரைஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது, தவறினால் மேற்படி மனுக்களில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும் .

M.K.முரளி
மனுதாரர்கள்/
வாதிகளின் வழக்குரைஞர்
பூவிருந்தவல்லி

IN THE HON'BLE XXVIII ASST CITY CIVIL COURT AT CHENNAI
E.P NO. 5654 OF 2022
IN
ARC NO. 404 OF 2013

Margadarsi Chits Private Limited., ...Petitioner/Decree Holder
VERSUS
D.Revathi and others ....Respondents/Judgement Debtors

To
Devaki Ammal (Alias) D.Devaki -JD3
W/o Late M.Duraiswamy
No.88/2, Thangam Flats, Patel Road, Perambur, Chennai-600 011.

Please take notice that in the above Execution Petition filed against you for Sale of your Immovable Property described in the Schedule hereunder. You are hereby requested to be present in person or through your counsel and your property will be auctioned in Public, as per the Order of the Hon'ble XXVIII Asst City Civil Court, Chennai at 4.00 P.M on 03.11.2025 in the City Civil Court Campus, High Court Buildings, Chennai.

SCHEDULE PROPERTY BELONGING TO RESPONDENT/ JUDGEMENT DEBTOR-3

Iteam No. 1:
All that piece and parcel of land and building situated at Old Door No.3/51A, New Door No.138 (as per document) and at present Old Door No.138, New Door No.288, Melpatti Ponnappa Mudali Street, Perambur, Chennai-600011 in O.S.No.140, R.S.No.780/2 of Perambur village (As per Patta RS.No.780/8) land measuring and extent of 2400 Sq.ft and bounded on the
North by: Property owned by Devaki Ammal South by: Melpatti Ponnappa Mudali Street East by: Elumalai Naicker Property and
West by: Murugesa Mudaliar Property
in all admeasuring and extent of 2400 Sq.ft of land together with a. building thereon and situated within the Registration Sub District of Purasawalkam and Registration District of Central Chennai and lying with the limits of Corporation of Chennai.

Iteam No.2:
All that piece and parcel of land and building situated at Old Door No.3/51A, New Door No.138 (as per document) and at present Old Door No.138, New Door No.288, Melpatti Ponnappa Mudali Street, Perambur, Chennai-600011 in O.S.No.140, R.S.No.780/2 of Perambur village (as per Patta R.S.No.780/30) land measuring and extent of 1200 Sq.ft and bounded on the
North by: Land belongs to Vedapuri Mudaliar
South by: Property owned by Devaki Ammal
East by : Land belongs to Unnamalai Ammal and
West by: Land belongs to Murugesa Naiker
in all admeasuring an extent of 1200 Sq.ft of land together with a building thereon and situated within the Registration Sub district of Purasawalkam and Registration District of Central Chennai and lying with the limits of Corporation of Chennai.

M.DURAIRAJ
Counsel For Decree Holder

JAIN METAL GROUP | recycle today. greener tomorrow.

JAIN RESOURCE RECYCLING LIMITED

(Formerly known as Jain Resource Recycling Private Limited)

Registered Office: THE LATTICE, Old No. 7/1, New No. 20, 4th Floor, Waddles Road, Kilpauk, Chennai 600 010
CIN: U27320TN2022PLC150206

Statement of Unaudited Standalone and Consolidated Financial Results of Jain Resource Recycling Limited for the Quarter ended June 30, 2025

(₹ Million)

Sl. No.	Particulars	Standalone Quarter ended (Un-Audited) 30.06.2025	Standalone Quarter ended (Un-Audited) 31.03.2025	Standalone Quarter ended (Un-Audited) 30.06.2024	Standalone Year ended (Audited) 31.03.2025	Consolidated Quarter ended (Un-Audited) 30.06.2025	Consolidated Quarter ended (Un-Audited) 31.03.2025	Consolidated Quarter ended (Un-Audited) 30.06.2024	Consolidated Year ended (Audited) 31.03.2025
1	Total Income from operations	14,696.91	16,392.05	14,364.61	61,432.51	15,492.50	17,600.23	14,964.85	64,293.80
2	Net Profit / (Loss) for the Period (Before Tax and Exceptional items)	793.82	770.92	787.55	2,889.23	780.07	765.87	809.16	3,033.47
3	Net Profit / (Loss) for the Period Before Tax (After Exceptional Items)	793.82	770.92	787.55	2,889.23	780.07	765.87	809.16	3,033.47
4	Net Profit / (Loss) for the Period After Tax (After Exceptional Items)	591.51	563.36	584.26	2,111.35	575.06	542.29	600.10	2,218.00
5	Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the Period (After Tax) and Other Comprehensive Income (After Tax)	589.77	561.50	583.16	2,104.41	566.39	522.99	594.75	2,225.02
6	Equity Share Capital	647.07	647.07	410.26	647.07	647.07	647.07	410.26	647.07
7	Earnings Per Share for Continuing and discontinued operations								
	a) Basic	1.83	1.81	1.87	6.77	1.77	1.69	1.91	7.16
	b) Diluted	1.83	1.81	1.69	6.77	1.77	1.69	1.72	7.16

Notes:

1) The above unaudited standalone and Consolidated financial results were reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on October 21, 2025 and has been subjected to review by the Statutory Auditors of the Company. These unaudited standalone financial results have been prepared in accordance with the recognition and measurement principles provided in Indian Accounting Standard (Ind AS) 34 on 'Interim Financial Reporting', the provisions of the Companies Act, 2013 (the Act), as applicable and guidelines issued by the Securities and Exchange Board of India (SEBI) under SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015 as amended.
2) The unaudited standalone and Consolidated financial results for the corresponding quarter ended March 31, 2025 and comparative quarter ended June 30, 2024 have neither been reviewed nor audited by the statutory auditors of the company. However, the management has exercised necessary care and diligence to ensure the standalone and Consolidated financial results for such periods are fairly stated.
3) Subsequent to the quarter ended June 30, 2025, the Company successfully completed its Initial Public Offering (IPO) of 53,879,309 equity shares with a face value of Rs. 2 each at an issue price of Rs. 232 per share. The IPO comprised a fresh issue of 21,551,724 shares and an offer for sale of 32,327,585 shares by selling shareholders. Following the IPO, the equity shares of the Company were listed on the National Stock Exchange of India Limited (NSE) and the BSE Limited on October 01, 2025. Accordingly, the unaudited standalone and Consolidated financial results for the quarter ended June 30, 2025, have been prepared for the first time in compliance with SEBI listing regulations.
4) a) The unaudited consolidated financial results of the group includes the financial results of the subsidiary Companies and share of profit from associate for the quarter ended June 30, 2025, March 31, 2025 and Year ended March 31, 2025.
   b) The unaudited consolidated financial results of the group includes the financial results of the subsidiary Companies for the quarter ended June 30, 2024.
5) Segment information has been provided under the notes forming part of the consolidated unaudited financial results for the quarter ended June 30, 2025 as per para 4 of Indian Accounting Standard (Ind AS) 108 "Operating Segments", specified under Section 133 of the Companies Act, 2013.
6) The figures for the year ended March 31, 2025, have been extracted from the general purpose standalone financial statements of the Company for the year ended March 31, 2025, which were audited by the Statutory auditors of the Company.
7) Subsequent to the quarter ended June 30, 2025, the board of directors in their meeting dated October 08, 2025 have approved to incorporate a subsidiary under the provisions of the Companies Act, 2013 with the name and style of "Jain CY Circular Solutions Private Limited" or "Jain CY Recycling Private Limited".
8) a) During the period ended 30 June 2025 Jain Ikon Global Ventures has discontinued its operations on refining of precious metals.
   b) The Company entered into a definitive agreement to sell its 28.88% equity interest and realize its loan from Sun Minerals Mannar Private Limited.
9) Figures of previous periods/ year have been regrouped, wherever necessary.
10) The above unaudited standalone financial results are available on the Company's website viz. www.jainmetalgroup.com and on the websites of BSE (www.bseindia.com) and NSE (www.nseindia.com).

Place : Chennai
Date : October 21, 2025

For Jain Resource Recycling Limited
Sd/-
Kamlesh Jain
Chairman & Managing Director
DIN : 01447952

Adfactors 330/25